ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2387/36 - 2024 ජුනි මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.06.06

*2387/36 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

இணைப்பு - 01

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(இ) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேல் மாகாணத்தின் 1990 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, வீடமைப்பு அபிவிருத்தி நிதியத்தை ஸ்தாபிப்பது தொடர்பான நியதிச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்**

மேல் மாகாணத்தின் ஆளுநர் றொஷான் குணதிலக ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(இ) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேல் மாகாணத்தின் 1990 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, வீடமைப்பு அபிவிருத்தி நிதியத்தை ஸ்தாபிப்பது தொடர்பான நியதிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கிணங்க, பின்வரும் ஒழுங்குவிதிகள் இங்கு அமுல்படுத்தப்படுவதாக இங்கு அறிவிக்கின்றேன்.

மேலும் 2024 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, மேற்கூறிய ஒழுங்குவிதிகள் 2024, யூன் 01 ஆந் திகதி தொடக்கம் வலுவுக்கு வருவதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

**றொஷான் குணதிலக,**
ஆர்டப்பீ அன்ட் பார் வீஎஸ்வீ யூஎஸ்பீ பீஎச்டி (கௌரவ),
எப்ஜஎம் (ஸ்ரீலங்கா) என்டிசீ பீஎஸ்சீ,
விமானப்படை மார்ஷல்,
ஆளுநர்,
மேல் மாகாணம்.

மேல் மாகாண ஆளுநர் அலுவலகம்,
மேல் மாகாண சபைக் கட்டிடம்,
பத்தரமுல்ல,
*2024, மே 29.*

1A - PG 6746 — 44 (2024/06)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ் ஒழுங்குவிதிகள் 2024 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, மேல் மாகாணத்தில் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான வீடமைப்பு உதவிகளை வழங்குவதற்கான ஒழுங்குவிதிகள் என அழைக்கப்படும்.

2. மேல் மாகாண வீடமைப்பு அபிவிருத்தி நிதியத்தினால் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் வீடமைப்பு உதவி பின்வரும் வகைகளின் கீழ் தொடர்புடைய பெறுமதியின் கீழ் இருக்க வேண்டும்.

| தொகுதி | பெறுமதி |
|---|---|
| 01. **5 'அ' (1). புதிய வீடு கட்டுதல்**<br><br>இந்த நோக்கத்திற்காக ஒரு பயனாளிக்கு வழங்கப்படும் அதிகபட்ச உதவித் தொகை (துவணைக் கட்டணங்கள் 02.)<br><br>(i) வேலையை ஆரம்பிக்கத் தயாராக இருக்கும்போது - ரூ. 150,000.00<br><br>(ii) பகுதியளவு கட்டி முடிக்கப்பட்ட வீட்டின் மீதமுள்ள பகுதியை நிறைவு செய்ய - ரூ. 150,000.00 | ரூ. 300,000.00 |
| 02. **5 'அ' (2). வீட்டை மேம்படுத்தவும், ஓரளவு முடிக்கப்பட்ட வீட்டை முடிக்கவும்** (துவணைக் கட்டணங்கள் 02.)<br><br>(i) வேலையை ஆரம்பிக்கத் தயாராக இருக்கும்போது - ரூ. 100,000.00<br>(ii) திட்டமிடப்பட்ட வேலைகளில் அரைவாசி முடிந்தவுடன் - ரூ. 100,000.00 | ரூ. 200,000.00 |

3. வீடமைப்பு அபிவிருத்தி நிதியத்தில் எப்பொழுதும் குறைந்தபட்ச இருப்புத்தொகையாக ரூ. 60 மில்லியனைப் பேணுவதன் மூலம் இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் வீடமைப்பு உதவி வழங்கப்பட வேண்டும்.

4. இவ் ஒழுங்குவிதிகள் நடைமுறைக்கு வரும் திகதி தொடக்கம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2318/ 51 ஆம் இலக்க, 2023, பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள மேல் மாகாணத்தில் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்காக வீடமைப்பு உதவிகளை வழங்குவதற்குரிய ஒழுங்குவிதிகள் இங்கு இல்லாதொழிக்கப்படுகின்றன.

5. இவ் ஒழுங்குவிதிகளின் கீழ் "குறைந்த வருமானம் பெறுபவர்கள்" என்பது மாதாந்தம் பதினையாயிரம் ரூபாவுக்கு மேற்படாத வருமானம் பெறுபவர்கள் என்ற கருத்தாகும்.

6. இவ் ஒழுங்குவிதிகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி உரைகளுக்கிடையில் ஒவ்வாமை ஏற்பட்டால், சிங்கள மொழி உரையே மேலோங்கி நிற்கும்.

EOG 06 - 0043

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.